Clr.No.19

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

Calendar :
Miscellaneous :
Preliminary Register : Case No. CC.183/2022
Sessions :
Deposition of witness for : Prosecution PW1

Name .. ஹபிபுல்லா

Father’s/Husband's Name .. நாகூர் ஹனி

Village
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age .. 49

Date:05.02.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை:-

1. நான் திருவொற்றியூர் மார்க்கெட் அருகே உள்ள கிராம தெருவில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். எதிரிகள் யார் என்றால் என்னுடைய அப்பா, தம்பி மற்றும் அங்கு வேலை பார்க்கும் வேலைக்காரர் ஆகும். கடந்த 4.12.2021 அன்று

ஞாயிற்றுக்கிழமை மதியம் சுமார் 03.30, 04.00 மணி அளவில், ராஜா கடையில் எங்களுக்கு சொந்தமான கடை ஒன்று காலியாக இருந்தது. அங்கு என் ஆட்டோ சம்பந்தப்பட்ட பொருட்களை வைத்திருந்தேன். அதை எடுக்கச் சென்ற பொழுது, நான் அந்த கடையை பயன்படுத்தக் கூடாது என்று எதிரிகள் மூவரும் பிரச்சனை செய்தார்கள்.

2. அப்போது அவர்களிடம் நான், ஜமாத்தில் முறையிட்ட பிறகு தான் நான் இங்கு வந்துள்ளேன் எதுவாக இருந்தாலும் ஜமாத் மூலமாக வாருங்கள் என்று கூறினேன். என்ன பெரிய ஜமாத் என்று கூறி என்னை மொத்தம் நான்கு பெயர்கள் வலுக்கட்டாயமாக இழுத்தார்கள். அதில் ஒரு நபர் சீனிவாசன் என்பவராகும். ஆனால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. கடையை காலி செய்து கொடுத்துவிட்டு செல்லுமாறு என் தந்தை என்னை மிரட்டினார். நான் அங்கிருந்து செல்ல முற்பட்ட பொழுது என் சட்டையை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்கள். சட்டையை அங்கேயே விட்டுவிட்டு ஜமாத் செல்வதற்காக அங்கிருந்து மெட்ரோ ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன்.

3. அப்போது எதிரிகள் மற்றும் சீனிவாசன் ஆகியோர் அங்கு வந்து கொம்பு மற்றும் கட்டையால் என்னை தாக்கினார்கள். என் தலையில் அடித்தார்கள். தலையில் பின் பக்கம் காயம் ஏற்பட்டு வலிந்து கொண்டிருந்தது. அப்படியே காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்திலிருந்து சிகிச்சைக்காக சுகம் மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்த பொழுது ஜமாத்தில் இருந்து ஆட்கள் அங்கு வந்து, என் தந்தை கோபத்தில் செய்துவிட்டார் என்றும் சமாதானமாக சென்று விடுங்கள் என்று கூறினார்கள். அதனால், நான் அமைதியாக இருந்தேன். மருத்துவ செலவிற்கு என் தந்தை பணம் கொடுத்தார்.

4. சுமார் ஒரு மாத காலம் பிறகு, மீண்டும் கடையை காலி செய்ய வேண்டும் என்று என் தந்தை பிரச்சனை செய்தார். அதன் பிறகு, நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(**புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. சீனிவாசன் என்ற நபர் என் தந்தையின் நண்பராகும். அவர் எங்கு குடியிருந்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரித் தரப்பு குறுக்கு விசாரணை:- (குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. பரிசீலிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)